(5) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மசோதாவினை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய் யப்பட்டது.

7. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து நிதிக் கோரிக்கைகள். இன்றைக்கு மூன்று கோரிக்கைகள் உள்ளன. முதல் கோரிக்கை, அரசாங்க வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு பற்றி எண் 46, ஏறத்தாழ ஒரு மணி வரையில் எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின்பு ஒரு கோரிக்கை எண் 47, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் பற்றி, 1-30 வரையில்; மாலையில் தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற பகுதி, கோரிக்கை எண் 24 எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள், அவருடைய கோரிக்கையைக் கொண்டு வருவார்கள்.

கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

" கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங் களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 85,89,07'100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

THIRU M. WILLIAM : To discuss about the procurement policy, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 85,89,07,100 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100.'

1967 ஜூலை 11]

* **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய விலை மதிக்க முடியாத நேரத்தை நான் அதிகம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனினும், இந்த அரசின் மிக மையமாகக் கருதப்படுகிற உணவுக் கொள்கையின் அடிப்படையையும், அது மேற்கொண்டுள்ள சாதனைகளையும் இந்த மாமன்றத்தின் கருத்துக்குக் கொண்டுவரவேண்டிய இன்றிய மையாக் கடமையைக் கருதி, மேலோட்டமாக இந்த மானியக் கோரிக்கையின்மீதுள்ள சில விவரங்களை இங்கே நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இந்த அமைச்சரவை பதவியேற்றபோது சென்னை மாநகரின் இரண்டு நாள் தேவைக்கான அரிசிகூட இருப்பில் இல்லை. அதே மாதிரி மாநில முழுவதிலும் அப்போதிருந்த இருப்பு 50 நாட்களுக்குக்கூட போதாது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதி அன்று இருந்த அரிசி இருப்பு அளவும் அதேகால அளவில் முந்திய ஆண்டின் இருப்பு நிலையும் வருமாறு :—

1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதி யன்று உள்ளபடி இருப்பு நிலைமை—1,05,597 டன் அரிசி.

1966-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதி யன்று உள்ளபடி இருப்பு நிலைமை—2,38,105 டன் அரிசி.

1965, 1966-ம் ஆண்டுகளிலிருந்ததுபோல கோதுமை போன்ற உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதன்மூலமும் வெளியிலிருந்து உதவி வருவதற்குக்கூட வழியில்லையென்று தெளிவாகத் தெரிந்தது.

சம்பா பயிர்க்காலத்தில் நெல் கொள்முதல் வேலையின் தொடக்கம் நன்றாக இல்லை. சாதாரணமாக கொள்முதல் வேலைக்கு மிகவும் சாதகமாகவுள்ள ஜனவரி, பிப்ரவரி திங்கள்களில் கொள்முதல் மிகவும் குறைந்துவிட்டது. 1966-67-ம் ஆண்டுகளில் செய்யப்பட்ட கொள்முதல் அளவு குறித்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது தெளிவாகத் தெரியவரும்.

	1966.	1967.
	(அரிசி டன் கணக்கில்.)	
ஜனவரி	1,02,228	41,599
பிப்ரவரி	1,95,072	1,06,549

இருப்பு குறைந்ததன் காரணம் இதுதான். தொடக்கத்தில் கொள்முதல் வேலைக்கு இடர்ப்பாடு ஏற்பட்டது.

ஆயினும், இச்சிக்கலுக்குத் தீர்வுகாண இந்த அரசு தயங்க வில்லை. உணவுப்பொருள் கட்டுப்பாடுகளை அறவே நீக்கவேண்டும் என்றும் தனிப்பட்ட மாநில மண்டலங்களை எடுத்து விடவேண்டு மென்றும் பெரும்பான்மையோர் கருத்து தெரிவித்தனர். ஆனால்,

* அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சரின் உரை.

கட்டுப்பாடுகளை நீக்குவதற்குமுன் கணிசமான அளவுக்கு அரசிடமுள்ள இருப்புகளை அதிகரித்துக்கொள்ளவேண்டியது இன்றியமையாதது என்பதை மறந்து விடுவதற்கில்லை. தமிழகத்தின் எல்லையிலுள்ள கேரள மாநிலம் மிகவும் பற்றுக்குறை உள்ள மாநிலம் ஆகும். எனவே, வட்டார மண்டலம் அமைப்பது பற்றி சிந்திக்கக்கூட முடியாத நிலை இருந்தது. இருப்புகள் பற்றிய நிலவரங்கள், கொள்முதலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் நமது பொறுப்புகளின் அளவு ஆகியவற்றைப் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காக மாவட்டக் கலெக்டர்கள் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. உணவுப் பொருள் குறித்த கட்டுப்பாடு முழுவதையும் எடுத்துவிடுவதோ, வட்டார மண்டல முறையைக் கொண்டுவருவதோ அவசரமும் அபாயமும் நிறைந்த சோதனையாகும் என்றும் இருப்புகளை நன்கு அதிகரிக்கும் வகையில் கொள் முதல் வேலையை முழுமூரமாக்கி அதன் பின்னர் படிப்படியாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்து சிந்திப்பது சாலச் சிறந்ததாகும் என்றும் இந்த மாநாட்டு விவாதங்கள் மூலம் தெரிய வந்தது.

மாநாட்டின் முடிவில் தமிழக முதலமைச்சர் மும்முனைத் திட்ட மொன்றை விளக்கினார்—

(1) பெரு நிலக்கிழார்களிடமிருந்து அதாவது, 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் நிலங்களை வைத்திருக்கும் நிலக்கிழார்கள் விற்பனைக்காக வைத்துள்ள உபரி இருப்பு முழுவதையும் கொள் முதல் செய்யும் அளவில் கொள்முதல் வேலை முழுமூரமாக்கப்பட வேண்டும். ஒரு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ள குடியானவர்களுக்கு கொள்முதலினின்றும் முழுவதும் விலக்கு அளிக்கப்பட வேண்டும். இடையிலுள்ள பிற குடியானவர்களிடமிருந்து இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ள அளவு கொள் முதல் செய்யப்படவேண்டும்.

(2) பதுக்கல் வேலையும், கடத்தல் வேலையும் அறவே ஒழிக்கப்பட வேண்டும். இதற்காக அவசியமானால் அரசு இன்னும் அதிகமான அதிகாரங்களை மேற்கொள்ளும்.

(3) உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு நிலை ஏற்பட்டு விட்டால் மட்டும் போதும் என்ற வகையில் அல்லாது எவ்வளவு குறுகிய காலத்தில் முடியுமோ அவ்வளவு குறுகிய காலத்தில கணிசமான அளவுக்கு உபரி இருப்பு இருக்கும் வகையில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க மும்முரமாக முயற்சி செய்யப்படவேண்டும்.

இவ்வாறாக, ஏழை மக்களுக்குத் தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் கொள்முதல் வேலை தொடர்ந்து நிறை வேற்றப்பட வேண்டுமென்று இவ்வேலையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும்—உற்பத்தியாளருக்கும், உணவுப்பொருள் வழங்கு துறை அதிகாரிகளுக்கும்—அரசு திட்டவட்டமாக அறிவித்தது.